SECONDARY SCHOOL

END - OF - YEAR EXAMINATION - 2017

TAMIL LANGUAGE PAPER

SECONDARY 3 EXPRESS / 3NA

Duration:

Total Marks : 60

---

**Instructions to Canditates:**

1) ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்து கொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2) தேர்வு எழுதுவதற்கு முன்னர் விடைத்தாளில் உமது பெயர் வகுப்பு ஆகியவற்றைச் சரியாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும்.

3) அகராதி பயன்படுத்துவோர் அகராதியின் பெயரை விடைத்தாளின் முகப்பு அட்டையின் மேல் வலப் பக்கக் கோடியில் எழுத வேண்டும்.

**SECONDARY 3 EXPRESS**

**SECONDARY 3 SET 11 /15**

More papers at www.testpapersfree.com

# தமிழ்

## தாள் 2

### "அ" பிரிவு

**A1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள்** (10 மதிப்பெண்கள்)

*கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதுக.*

Q1. கண்ணன் எதையுமே ______________ கூறும் இயல்புடையவன் என்பதால் அவன் கூறும் எந்தச் செய்தியையும் யாரும் நம்புவதில்லை.

Q2. தம் மகனை ஒரு மருத்துவனாகக் காண வேண்டும் என்ற அந்தத் தாயின் எண்ணம் ______________ அவள் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தாள்.

Q3. புதிதாகப் பணியில் சேர்ந்த குமரன் பல மாதப் பயிற்சிக்குப் பின்னரும் தன் வேலைகளை ______________ செய்ததால் மேலதிகாரியின் கோபத்திற்கு ஆளாக நேரிட்டது.

Q4. பிறர் கருத்துகளுக்கு மதிப்பளிக்காமல் தாம் நினைத்த காரியத்தை ______________ சாதிக்கும் போக்குடையவர்கள் நம்மிடையே இருக்கவே செய்கின்றனர்.

Q5. செல்வன் உயர்கல்வி பயிலத் தன்னை இந்தியாவிற்கு அனுப்ப வேண்டும் என்று தன் தந்தையிடம் ______________.

| | |
|---|---|
| (1) கண்மூடித்தனமாக | (6) ஒரு காலில் நின்றான் |
| (2) இட்டுக் கட்டி | (7) ஈடேறியதால் |
| (3) ஓடியாடிப் பார்த்தான் | (8) குரங்குப் பிடியாயிருந்து |
| (4) கை கொடுத்ததால் | (9) தலைமேற்கொண்டு |
| (5) தப்பும் தவறுமாக | (10) கண்ணும் கருத்துமாய் |

(அடுத்த பக்கம் பார்க்க)

More papers at www.testpapersfree.com

## A2 வாக்கியங்களை முடித்தெழுதுதல்

பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்துக் காட்டுக. அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும்.

<u>உமது விடைகளை மட்டும் விடைத்தாளில் எழுதுக.</u>

Q6. உடல் பருமனைக் குறைக்கவும் உடல் நலத்தைப் பேணிக்காக்கவும் சுகாதார அமைச்சு பல இயக்கங்களை நடத்தி வருகிறது.

உடல் பருமன் குறையவும் உடல் நலத்தைப் பேணவும் சுகாதார அமைச்சால் ______________ .

Q7. அறிவியல் கண்டுபிடிப்புகளால் மனித சமுதாயம் நன்மை அடைய வேண்டும் என்பதே விஞ்ஞானிகளின் நோக்கம்.

மனித சமுதாயம் நன்மை அடைய வேண்டும் என்பது ______________ .

Q8. உயர்ந்த நோக்கமும் கடுமையான உழைப்பும் ஒருவருக்கு உன்னதமான வாழ்க்கையை உருவாக்கித் தரும்.

ஒருவரிடம் உயர்ந்த நோக்கமும் கடுமையான உழைப்பும் இருந்தாலன்றி ______________ .

Q9. புரிந்துணர்வும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் குடும்ப உறுப்பினர்களிடையே பிணைப்பை வலுப்படுத்தும்.

குடும்பப் பிணைப்பு வலுப்பட ______________________________ .

Q10. உதவி செய்வோரை மறவாமல் அவர் செய்த உதவியைப் போற்றுவது சிறந்த பண்பாகும்.

உதவி செய்வோரை மறந்து அவர் செய்த உதவியை ______________________________

(அடுத்த பக்கம் பார்க்க)

More papers at www.testpapersfree.com

" ஆ" பிரிவு

B3. அமைப்புச்சொற்கள் (10 மதிப்பெண்கள்)

*கீழ்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள் பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதுக.*

1671 ஆம் ஆண்டு 'விண்ட்சர்' அரண்மனை விழாக்கோலம் பூண்டிருந்தது. விருந்து உபசாரம் வெகு -----(Q11)---- நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு சில ராஜபரம்பரையினருக்கே மன்னருடன் தலைமை மேசையில் அமர்ந்திருக்க வாய்ப்புக் கிடைத்தது. அது மட்டுமல்ல இன்னுமொரு விசேஷமும் அவர்களுக்குக் காத்திருந்தது. முதன்முதலாக அவர்களுக்கு மட்டும் ஒரு -----(Q12)----- உணவு பரிமாறப்பட்டது. என்றுமே பார்த்திராத அந்த விந்தை உணவை உண்பதைக் கண்டு மற்ற விருந்தினர்கள் ஆவல் ததும்ப குழப்பத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அந்த அபூர்வ உணவைத் தயாரிக்கும் தொழில்நுட்பமுறை அரண்மனை -----(Q13)----- சமையற்காரருக்கு மட்டுமே தெரிந்திருந்தது. அந்த ரகசியத்தை வெளிவிடாது காப்பாற்றி வைப்பதற்காக அந்தச் சமையற்காரருக்கு, அவரது வாழ்நாள் பூராவும் ஊதியம் வழங்குவதாக மன்னர் அறிவித்திருந்தார். அந்த நாட்களில் இந்த உணவு ஆடம்பர உணவாக மதிக்கப்பட்டது. அதனால் அதன் தயாரிப்புமுறை அரண்மனைக்குள்ளேயே -----(Q14)----- கிடந்தது. இதுவே "ஐஸ்கிரீம்" எனப் பிற்காலத்தில் பெயர் பெற்றது.

இருப்பினும் இந்த "ஐஸ்கிரீம்" முதன்முதலாக எப்போது தயாரிக்கப்பட்டு வெளிவந்தது என்பது இன்னமும் -----(Q15)----- உள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீன மக்கள் "ஐஸ்கிரீம்" செய்யும் முறையைத் தெரிந்து வைத்திருந்தார்கள் எனவும், மார்க்கோபோலோ அந்நாட்டுக்குச் சென்றிருந்தபோது அதன் செய்முறை ரகசியத்தை இத்தாலிக்கு எடுத்துவந்தார் எனவும் பிரபல நூல் ஒன்று குறிப்பிடுகின்றது.

| | |
|---|---|
| 1. மர்மமாகவே | 2. அறிய |
| 3. பிரபலமாக | 4. தலைமை |
| 5. முடங்கி | 6. இன்றியமையாத |
| 7. அபூர்வ | 8. கோலாகலமாக |
| 9. அதிசயமாகவே | 10. அடங்கி |

(அடுத்த பக்கம் பார்க்க)



More papers at www.testpapersfree.com

## "இ" பிரிவு

### C4. தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)

*பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு விடை தருக.*

பகுதி 1 : "தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்" என்பது வெறும் வாசகங்கள் அல்ல. வாழ்க்கையில் அனுபவத்தால் வந்தவை. தட்டியவர்களுக்கு கதவுகள் திறக்கப்படுகின்றன. அதேபோல கேட்டவர்களுக்குக் கொடுக்கப் படுகின்றன. எடுத்துக்காட்டுக்கு, இராணுவச் சேவைக்காக மற்றவர்களின் கேலிப்பேச்சுகளைப் பொறுத்துக்கொண்டு முயற்சி செய்தவர்கள் அந்த முயற்சியில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். எனவே எந்தச் செயலில் ஈடுபட்டாலும் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். தோல்வி கண்டபோது துவண்டு விடாமல் வெற்றியை நோக்கிய பயணத்தில் ஊக்கத்தோடு ஈடுபடவேண்டும். நம் பயணத்தில் தேக்கம் இருக்கக்கூடாது. முதலில் குறிக்கோள்களை வகுத்துக் கொள்ள வேண்டும். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை ஜன்னல் இல்லாத வீடு போன்றது. கதவுகள் குறிக்கோள்கள் என்றால் தட்டுவது நமது முயற்சி. நம்மிடம் எந்தக் குறிக்கோளும் இல்லையென்றால் எந்தக் கதவைத் தட்டுவது?

என்ன முயற்சி செய்து என்ன ஆகப்போகிறது? அது ஆகிற படிதான் ஆகும் என்று சோம்பல் வசனம் பேசிக்கொண்டிருந்தோமானால், ஒரு நாளும் நாம் வெற்றியைச் சந்திக்க முடியாது. எதுவும் தானாக நிகழாது. நமது தோல்விக்குப் பிறரைக் காரணம் சொல்லக்கூடாது. நமது தோல்விக்கு நாம்தான் பொறுப்பு. எதில் ஈடுபட்டாலும் அக்கறை காட்ட வேண்டும். அக்கறை இல்லாத பணி தோல்வியைத் தரும். பெரிய மனிதர்கள் உச்ச நிலையை அடைந்தார்கள் என்றால் அவர்கள் வெற்றியைத் திடீரென்று பெற்று விடவில்லை. மற்றவர்கள் தூங்கிக் கொண்டிருக்கும்போது அவர்கள் ஓய்வின்றி உழைத்து முன்னேறினார்கள். நாம் முயற்சி செய்கிறபோது பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்கிற அலுப்புத் தோன்றும். சோம்பல் கூடவே வரும். தட்டுங்கள் திறக்கப்படும் என்பது ஒரு குறியீடு! அந்த வாசகங்கள் நம் வாழ்க்கையில் முயற்சி வேண்டும் என்பதற்காகவே சொல்லப் பட்டிருக்கின்றன. தோல்வி நம்மை அதிகமாக அழுத்துகிறபோது மேலும் கடினமாக முயற்சி செய்யவேண்டும்.



More papers at www.testpapersfree.com

வினாக்கள்

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் கொடுக்கப் பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதுக.

Q16. இராணுவ வீரர்கள் வெற்றி பெற்றது எதனால்?
1) மற்றவர்களின் கேலிப்பேச்சைப் பொறுத்துக் கொண்டதால்
2) கதவுகளைத் தட்டியதால்
3) தொடர்ந்து முயற்சி செய்ததால்
4) பயணத்தில் தேக்கம் இல்லாததால் ( )

Q17. வெற்றியை எப்பொழுது சந்திக்க முடியும்?
1) குறிக்கோளைக் வகுத்துக் கொள்ளாதபோது
2) ஜன்னல் இல்லாத வீட்டைத் தட்டும்போது
3) போகிற ஊர் தெரிகிறபோது
4) சோம்பல் வசனம் பேசாதபோது ( )

Q18. பெரிய மனிதர்கள் வெற்றி அடையக் காரணம் என்ன?
1) மற்றவர்கள் தூங்கிக் கொண்டிருந்ததால்
2) தொடர்ந்து உழைத்ததால்
3) சோம்பலும் அலுப்பும் தோன்றியதால்
4) மற்றவர்கள் தோல்வி அடைந்ததால் ( )

More papers at www.testpapersfree.com

ஒரு காவல் அதிகாரியாக, ஒரு வழக்குரைஞராக, ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கும் நான், இனம் மற்றும் சமய விவகாரங்கள் எளிதில் பெரிய பிரச்சனையாக மாறியிருப்பதை நேரடியாகப் பார்த்திருக்கிறேன். சிங்கப்பூரில் மக்கள் ஒருவர் மற்றவரின் இனம் மற்றும் சமயத்தைப் பற்றி நன்கு அறிந்திருப்பதற்கு வலுவான திட்டத்தையும் முறையையும் வகுத்திருப்பதால், மக்கள் அதன்மீது அசைக்க முடியாத நம்பிக்கையை வைத்து இருக்கிறார்கள். அதனால்தான் இப்படிப்பட்ட சமய மற்றும் இனப் பிரச்சினைகள் இங்குத் தலையெடுப்பதில்லை.

இன நன்னம்பிக்கை மற்றும் சமயப் புரிந்துணர்வு ஆகியவற்றில் வலுவான கடப்பாடு கொண்டிருக்கும் சிங்கப்பூரர்களுக்கு இடையே மலேசியாவில் நடைபெற்றது போன்ற சம்பவம் நடப்பதற்கு அவர்களின் இன ஒற்றுமை ஒருபோதும் விட்டுக் கொடுக்காது. எனது தற்போதைய அக்கறை என்னவென்றால், தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளைக் கொண்டுள்ள அடுத்த தலைமுறை சிங்கப்பூரர்களும், சிங்கப்பூரில் வசிக்கும் வெளிநாட்டினரும் இனநம்பிக்கையைக் கட்டிக் காக்கும் தன்மையைத் தொடர்வார்களா என்பதே ஆகும். கடந்து வந்த காலங்களில் நாம் கற்றுக்கொண்டவற்றை நாம் அடுத்த தலைமுறைக்கு மாற்றிவிடவில்லை என்றால், எதிர்காலத்தில் சமூகப் பிரச்சனைகளைச் சந்திக்க நேரிடும் என்பதை நாம் என்றென்றும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறாக, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஆர்.ரவீந்திரன் 'பெட்டிர்' இதழுக்கு எழுதிய சிறப்புக் கட்டுரையில் கூறியுள்ளார்.

(தழுவல் : தமிழ்முரசு)

Q19 இனப் பிரச்சனைகள் ஏற்படாமல் இருக்கக் காரணம் என்ன?

(1) பிற இன சமயத்தைப் பற்றி நம்பிக்கை வைத்திருப்பது

(2) பிற சமயத்தைப் பற்றி நன்கு அறிந்திருப்பது

(3) ஆழமான அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருப்பது

(4) பிற இனத்தைப் பற்றி நன்கு அறிந்திருப்பது ( )

Q20 இன ஒற்றுமை ஏற்பட என்ன செய்ய வேண்டும்?

(1) இன நல்லிணக்கம் கொண்டிருக்க வேண்டும்

(2) விட்டுக் கொடுத்து வாழ வேண்டும்

(3) பிற இனத்தவருடன் பிணக்கத்தோடு வாழ வேண்டும்

(4) விருப்பு வெறுப்பில்லாமல் வாழ வேண்டும் ( )

(அடுத்த பக்கம் பார்க்க)



More papers at www.testpapersfree.com

## "இ" பிரிவு

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.

குழந்தையின் வளர்ச்சியில் குடும்பம், பள்ளி, சமூகம் முதலிய யாவும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. எனினும் குடும்பமே முதலிடம் பெறுகிறது. ஏனெனில் குழந்தையின் வளர்ச்சிக்கு அடிப்படை அமைத்துத் தருவது குடும்பம்தான். எனவே குழந்தையின் வளர்ச்சியில், குடும்பத்தில் உள்ளவர்களுக்கே முக்கியப் பங்கு உண்டு. குறிப்பாகத் தாய் தந்தையரின் பங்கு முக்கிய இடம்பெறுகிறது. குழந்தையின் வளர்ச்சிக்கு முதற்பொறுப்பாகவும் முக்கியப் பொறுப்பாகவும் இருக்கும் பெற்றோரே தங்கள் குழந்தைகளின் வளர்ச்சி சீராகவும் முறையாகவும் அமையுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

குழந்தையின் வளர்ச்சியில் மூன்று <u>கூறுகள்</u> உள்ளன. உடல் வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, மன வளர்ச்சி என்பனவே அவை. இந்த மூன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. அதாவது உடல் வளர்ச்சியில் ஏற்படும் குறை மன வளர்ச்சியையும், மன வளர்ச்சியில் ஏற்படும் குறை அறிவு வளர்ச்சியையும் பாதிக்கின்றது. எனவே இவை மூன்றும் குறைவின்றி வளர நாம் உதவ வேண்டும்.

இன்று எல்லாரும் தம் குழந்தைகளின் உடல் வளர்ச்சியிலும் அறிவு வளர்ச்சியிலும் காட்டுகின்ற <u>அக்கறை</u> குழந்தைகளின் மன வளர்ச்சியில் காட்டுகின்றனரா என்பதுதான் இப்போது நம்மிடையே உள்ள கேள்வி. மன வளர்ச்சியும் சரியாக அமைய வேண்டும் என்பது மிகவும் முக்கியம். மனிதனுடைய இயல்புகளுக்கும் நடத்தைக்கும் அடிப்படையாக அமைவது மனமே. மன வளர்ச்சியில் சிந்திக்கும் ஆற்றல், முடிவு செய்யும் திறன் ஆகியவை அடங்கியுள்ளன. குழந்தைகளிடத்து இந்த இரண்டும் சரியாக வளர்வதற்கு நாம் உதவுவோமாயின், குழந்தையின் மனப்போக்கு, செயல்பாடு ஆகிய இரண்டும் சரியாகவும் சிறப்பாகவும் அமையும்.

மற்ற உயிரினம் எதற்குமே இல்லாத சிந்திக்கும் ஆற்றல் மனித இனத்துக்கு மட்டுமே அமைந்திருக்கிறது. சிந்திக்கும் ஆற்றல் உள்ள மனிதன், தன் அறிவுக்குச் சரியென்று பட்டாலொழிய எவ்விதக் கட்டுப்பாடுகளுக்கும் <u>அடங்கி</u> நடக்கமாட்டான். அப்படியே அவன் பிறரின் வற்புறுத்தலுக்கு இணங்கிக் கட்டுப்பட்டு அடங்கி நடந்தாலும், அது தற்காலிகமானதாகவே இருக்கும்; நீடித்து நிற்காது. அந்தத் தடைகள் <u>விலகித்</u> தனக்குச் சுதந்திரம் கிடைக்கும்போது, அவன் தன் விருப்பப்படியே நடக்க முயல்வான். இது மிகவும் ஆபத்தானது. இந்த முறையால், நாம் எதிர்பார்ப்பதற்கு நேர் எதிரான பலன்தான் ஏற்படும்.

நம்முடைய <u>உத்தரவுக்குக்</u> குழந்தைகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்காமல், அவர்கள் தாமே சிந்தித்து முடிவு செய்வதற்கு நாம் உதவி புரிய வேண்டும். இதைச் செய், அதைச் செய் என்று சொல்வதைவிட இதை ஏன் செய்ய வேண்டும், அதை ஏன் செய்யக்கூடாது என்பதையும் அவர்கள் சிந்தித்து முடிவு செய்ய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதுதான் நல்லது. இதன் மூலம் குழந்தைகளின் சிந்தனைத் திறன் வளம் பெறுகிறது.

( அடுத்த பக்கம் பார்க்க )

More papers at www.testpapersfree.com

ஒன்றைப் பார்த்து அதை அப்படியே செய்து காட்டுவதில் குழந்தைகள் மிகவும் கெட்டிக்காரர்கள். அதிலே அவர்களுக்குத் தனியானதோர் ஆர்வமும் இருக்கிறது. ஆதலால் நம்முடைய நடவடிக்கைகள், பழக்கங்கள் முதலியவை குழந்தைகளுக்குச் சரியான வழிகாட்டியாக அமைய வேண்டும். அப்போதுதான் அவர்களுடைய எதிர்காலம் ஒளிமயமாகத் திகழும்.

C5 <u>வினாக்கள்</u> (30 மதிப்பெண்கள்)

Q21 எப்போது ஒரு குழந்தையின் வளர்ச்சி சிறப்பாக அமையும்?

Q22 மன வளர்ச்சி ஏன் இன்றியமையாதது?

Q23 மனிதன் சுய சிந்தனை உடையவன் என்பதை எவ்வாறு அறியலாம்?

Q24 குழந்தைகளின் சிந்தனை ஆற்றலை எவ்வாறு வளர்க்கலாம்?

Q25. இயற்கையிலேயே குழந்தைகளிடம் அமைந்துள்ள திறன் யாது? அத்திறன் விளைவிக்கும் பயன் என்ன?

D6 <u>சொற்பொருள்</u> (5 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் சொற்கள் மேற்கண்ட பகுதியில் இடம்பெற்றுள்ளன. அச்சொற்களின் பொருளை விடைத்தாளில் எழுதுக.

Q26. கூறுகள்

Q27. அக்கறை

Q28. அடங்கி

Q29. விலகி

Q30. உத்தரவுக்கு

(முற்றும்)



More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

# TESTPAPER 11

Set 11- விடைகள்

கண்ணன் எதையுமே ..........

Q1. 2 Q2. 7 Q3. 5 Q4. 8 Q5. 6

Q6. . . பல இயக்கங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

Q7. . . விஞ்ஞானிகளின் நோக்கமாக இருந்ததால் அறிவியல் கண்டுபிடிப்புகள் தோன்றின.

Q8. . . அவருக்கு உன்னதமான வாழ்க்கை உருவாகாது.

Q9. . . குடும்ப உறுப்பினர்கள் புரிந்துணர்வையும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும் கொண்டிருக்க வேண்டும்.

Q10. . . போற்றாமல் இருப்பது சிறந்த பண்பாகாது.

Q11. 8 Q12. 7 Q13. 4 Q14. 5 Q15. 1
Q16. 3 Q17. 4 Q18. 2 Q19. 3 Q20. 1

Q21. குழந்தையின் பெற்றோர் தங்கள் குழந்தையின் வளர்ச்சி சீராகவும் முறையாகவும் அமையுமாறு பார்த்துக் கொள்ளும்போது குழந்தையின் வளர்ச்சி சிறப்பாக உள்ளது .

Q22. மன வளர்ச்சியில் ஏற்படும் குறை அறிவு வளர்ச்சியைப் பாதிக்கிறது . மேலும் மனிதனுடைய இயல்புகளுக்கும் நடத்தைக்கும் அடிப்படையாக அமைவது மனம் என்பதாலும் மன வளர்ச்சியில் சிந்திக்கும் ஆற்றல் , முடிவு செய்யும் திறன் ஆகியவை அடங்கியிருப்பதாலும் மன வளர்ச்சி இன்றியமையாதது ஆகும் .

Q23. மனிதன் , தன் அறிவுக்குச் சரியென்று பட்டாலொழிய எவ்விதக் கட்டுப்பாடுகளுக்கும் அடங்கி நடக்க மாட்டான் என்பதிலிருந்தும் பிறரின் வற்புறுத்தலுக்கு இணங்கிக் கட்டுப்பட்டு நடந்தாலும் , தடைகள் விலகிச் சுதந்திரம் கிடைக்கும்போது மனிதன் தன் விருப்பப்படியே நடக்க முயல்வான் என்பதிலிருந்தும் , அவன் சுயசிந்தனை உடையவன் என்பதை அறிவான்.

Q24. நம்முடைய உத்தரவுக்குக் குழந்தைகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று எதிர்பாராமல் அவர்கள் தாமே சிந்தித்து முடிவு செய்வதற்கு உதவி புரிவதன் வழியும் ஒன்றைச் செய் என்று சொல்வதைவிட , அதை ஏன் செய்ய வேண்டும் , அதை ஏன் செய்யக்கூடாது என்பதை அவர்களே சிந்தித்து முடிவு செய்ய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதன் வழியும் குழந்தைகளின் சிந்தனை ஆற்றலை வளர்க்கலாம் .

Q25. ஒன்றைப் பார்த்து அதை அப்படியே செய்து காட்டுவதே இயற்கையிலேயே குழந்தைகளிடம் அமைந்துள்ள திறன் ஆகும் . நம்முடைய நடவடிக்கைகள் , பழக்கங்கள் , முதலியவை சரியான வழிகாட்டியாக அமையும்போது , அவற்றை அப்படியே பின்பற்றுவார்கள் . இதுவே அத்திறன் விளைவிக்கும் பயன் ஆகும் .

Q26. அம்சங்கள்
Q27. ஈடுபாடு
Q28. ஒடுங்கி
Q29. நீங்கி
Q30. ஆணைக்கு

More papers at www.testpapersfree.com